கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
திட்டக்குடி.

**OS.8/2018 DW: 1 11.02.2026**

2026ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11 நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய பழனிமுத்து என்பவரின் வாக்குமூலம் 1873ஆம் ஆண்டின் 10–வது விதியின் ஏற்பாட்டின்படி செல்வி.N.ஷாலினி,B.Com.L.L.B.(Hons.) ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பழனிமுத்து | வயது | 60 |
| த/க. பெயர் | முருகேசன் | தொழில் | |
| வட்டம் | திட்டக்குடி | கிராமம் | வேப்பந்தட்டை |
| மாவட்டம் | கடலூர் | | |

**குறுக்கு விசாரணை**

எனக்கு பூர்வீகம் அயன்பேரையூர். அயன்பேரையூர் திட்டக்குடியில் இருந்து சுமார் 13–15 கி.மீ இருக்கும். வழக்கு சொத்து கீழ்செருவாய் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். கீழ்செருவாய் கிராமத்தில் எனக்கு சொத்து எதுவும் இல்லை. வழக்கு சொத்தில் எனக்கு பாத்தியம் கிடையாது. நான் என் சகோதரிக்காக பொது அதிகார பத்திரத்தின் அடிப்படையில் இந்த வழக்கில் சாட்சி அளிக்கிறேன். அந்த பொது அதிகார பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனது பொது அதிகார பத்திரத்தில் வழக்கு சொத்தின் அனுபவம் எனக்கு நேரிட்டு தெரியும் என்ற வாசகம் அந்த பத்திரத்தில் இல்லை என்றால் சரிதான். அந்த பொது அதிகார பத்திரத்தில் எனது சகோதரிக்காக வழக்கில் சாட்சியளிக்க வாசகம் இல்லை என்றால் சரிதான்.

வாதி வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

N SHALINI
Digitally signed by N SHALINI
Date: 2026.02.11 17:24:49 +0530

Additional District Munsif,
Tittagudi.